உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 11.06.2026 • மலர் 04 • இதழ்: 162 • வியாழக்கிழமை • Edition : Nagercoil • 11.06.2026 • Vol : 04 • Issue : 162 • Page : 4 • Rs. 5/-

### மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தொடர்ந்து முயற்சி:

# என்டிஏ அரசின் 12 ஆண்டுகள் நிறைவு

## பிரதமர் மோடி பேச்சு



புதுடெல்லி, ஜூன் 11

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மத்திய அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது என்று பிரதமர் நரேந் திர மோடி தெரிவித்துள்ளார்.

2014ல் பிரதமர் பதவியேற்ற மோடி 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடி தனது சமூக ஊடகப் பக்கத்தில் #12YearsOf GaribKalyan என்ற ஹேஷ்டேக்குடன் இந்த மைல் கல் சாதனையை பகிர்ந்துள்ளார்.

இதையொட்டி பிரதமர் மோடி தனது சமூக வலை தளத்தில் கூறியுள்ளதாவது: கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா பல பெரிய மாற்றங்களைக் கண்டுள்ளது. அந்த மாற்றங்களின் மையப்புள்ளியாக ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் நலனே இருந்து வருகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மத்திய அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

பல தசாப்தங்களாக நாட்டின் வளர்ச்சி பலன்களைப் பெறாமல் விளிம்பு நிலையில் இருந்த மக்களுக்கு அனைத்து உதவிகளும் நேரடியாகக் கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. குறிப்பாக விவசாயிகளுக்கான பிஎம் கிசான் திட்டம், ஏழைகளுக்கான இலவச உணவு தானிய திட்டம், இலவச மருத்துவக் காப்பீடு, வீடமைப்பு, குடிநீர், சுகாதார பாதுகாப்பு மற்றும் பெண்கள் முன்னேற்ற திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளன.

மாதந்தோறும் 81 கோடிக்கும் அதிகமான மக்கள் இலவச உணவு தானியங்களைப் பெற்று வருகின்றனர். 'பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா' திட்டத்தின் கீழ் 4 கோடிக்கும் அதிகமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 'ஜல் ஜீவன் மிஷன்' திட்டத்தின் கீழ் 10.5 கோடிக்கும் அதிகமான கிராமப்புறக் குடும்பங்களுக்குக் குழாய் வழி குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

32 கோடிக்கும் அதிகமான பெண்கள் 'ஜன்தன்' வங்கிக் கணக்குகளைத் தொடங்கியுள்ளனர். சுமார் 3 கோடி பெண்கள் 'லட்சாதிபதி'களாக மாறியுள்ளனர். அதே வேளையில் நாடு முழுவதும் சுமார் 10 கோடி கழிப்பறைகள் கட்டப்பட்டு 91 லட்சத்துக்கும் அதிகமான சுய உதவிக் குழுக்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 2 கோடி இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். 'முத்ரா' கடன் திட்டத்தின் மூலம் 40 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான கடன் வழங்கப்பட்டுள்ளது. அரசு முன்னெடுப்புகள்மூலம் 10,000க்கும் மேற்பட்ட புத்தொழில்கள் (ஸ்டார்ட் அப்) அங்கீகரிக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை, 70 கோடிக்கும் அதிகமான மக்கள் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். 60 கோடிக்கும் அதிகமான மக்கள் இலவசச் சிகிச்சைக்கான பலன்களைப் பெற்று வருகின்றனர். 'ஜன் அவுஷதி' மையங்கள் மூலம் சுமார் 19,000 மலிவு விலை மருந்துகள் கிடைக்கின்றன. மேலும், 90 சதவீதத்துக்கும் அதிகமான தடுப்பூசிச் செயல்பாடு எட்டப்பட்டுள்ளது.

"வளர்ந்த இந்தியா" என்ற இலக்கை நோக்கி அரசு தொடர்ந்து முன்னேறும். மக்களின் வாழ்க்கையில் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் இடையறாது செயல்படுத்தப்படும். இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி முதன்முதலில் 2014ம் ஆண்டு மே 26 ம் தேதி பிரதமராகப் பதவியேற்றார். தற்போது, அவரது மூன்றாவது பதவிக் காலம் வெற்றிகரமாகத் தொடர்ந்துள்ளது. 12 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில், பாஜக மற்றும் அதன் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி (என்டிஏ) கட்சிகள் இணைந்து ஒரு மாதகால நாடு தழுவிய பிரசாரத்தை முன்னெடுத்துள்ளன.

நேரு சாதனை முறியடிப்பு: மேலும், இந்திய அரசியல் வரலாற்றில் மிக நீண்டகாலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ச்சியாகப் பதவியில் இருக்கும் பிரதமர் என்ற ஜவஹர்லால் நேருவின் சாதனையை (ஜூன் 10) பிரதமர் நரேந்திர மோடி முறியடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு மருத்துவமனையில் நூற்றுக்கணக்கான படுக்கைகள் கேட்பாரற்றுக் கிடக்கும் அவலம்! எச்.ராஜா



சென்னை, ஜூன் 11

தமிழக பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

ஈரோடு அரசு மருத்துவனையின் பார்க்கிங்பகுதியில்கேட்பாரற்றுபோட்டுக் கிடக்கும் நூற்றுக்கும் மேலான புதிய படுக்கைக் கட்டில்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் அதிர்ச்சியை அளிக்கின்றன. அவற்றில்பெரும்பாலனவைநோயாளிகள் உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் புதிதாக இருப்பவை. அனைத்தும் தூசி படிந்தும், துருப் பிடிக்கும் நிலையிலும் அம்போஎனகிடப்பதுஅவலத்தின்உச்சம்.

அரசு மருத்துவனைகளின் வார்டுகள் மற்றும் வராந்தா தரைகளில் படுத்துக் கிடக்கும் அப்பாவி நோயாளிகள் தமிழகம் முழுவதுமே நிரம்பி வழிகையில், இப்படி யாருக்குமே பலனில்லாமல் படுக்கைக் கட்டில்களை அநாதரவாக போட்டு வைத்து மக்களின் வரிப்பணத்தை வீணடிப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.

தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய்யே!...கடந்த ஒரு மாதமாக நாள்தோறும் கள ஆய்வு செய்ததாக ஊர்வலம் வரும் உங்களது வெத்துவேட்டு அமைச்சர்கள் கண்களில் இன்னமும் இது படாமல் இருப்பது உங்களது அரசின் நிர்வாகத் தோல்வியினையே பறைசாற்றுகிறது. அதிகாரிகளுக்கு உங்களது தத்தக்கா பித்தக்கா ஆட்சியில் துளியும் பயமில்லை என்பதன் அலட்சிய அடையாளமே இது.

இன்று கூட ஒரு மருத்துவமனையின் திடீர் ஆய்வுக்கு வந்த உங்களது அமைச்சர் ஒருவரிடம் 'நீங்கள் வருவது எங்களுக்கு முன்கூட்டியே தெரியும். தகவல் வந்துதான் நாங்களும் வந்தோம்' என்று சொல்லி மந்திரியின் மூக்கை உடைத்தார்கள் நிருபர்கள். இப்படித்தான் எல்லா திடீர் விசிட்டுகளும் முன்கூட்டி அதிகாரிகளிடம் சொல்லி வைத்து செட்அப்பாக நடைபெறுகின்றனவா?? இந்த வெட்கக்கேட்டிற்கு நாடக மாடல் தவெக உடனடியாக பதில் சொல்ல வேண்டும் என தமிழக பாஜக வலியுறுத்துகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மறைந்த இயக்குநர் பாரதிராஜாவின் உடலுக்கு முதல்வர் விஜய் நேரில் அஞ்சலி



சென்னை, ஜூன் 11

இயக்குநர் பாரதிராஜா (84) உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் இன்று (ஜூன் 10ம் தேதி) காலமானார். தமிழ்த் திரையுலகில் முன்னணி இயக்குநராக வலம்வந்த பாரதிராஜா, சமீபகாலமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு வீட்டில் இருந்தபடியே மருத்துவர்கள் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி சென்னை நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் இயக்குநர் பாரதிராஜா இன்று அதிகாலையில் காலமானார். கடந்தாண்டு மார்ச் மாதத்தில் அவரது மகன் மனோஜ் மறைந்த நிலையில், அத்துயரிலிருந்து மீளாத பாரதிராஜா, உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.

1977ம் ஆண்டு வெளியான 16 வயதினிலே திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான பாரதிராஜா, கிராமிய பின்னணியில் பல வெற்றிப் படங்களைஉருவாக்கி,தமிழ்த்திரையுலகில்தனக்கென தனித்த அடையாளத்தை உருவாக்கினார்.

இந்நிலையில் இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் உடலுக்கு முதல்அமைச்சர் விஜய் நேரில் அஞ்சலி செலுத்தினார். சென்னை நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பாரதிராஜாவின் உடலுக்கு முதல்அமைச்சர் விஜய் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

## இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவது நமது சாதனையாக இருக்க வேண்டும்: அமைச்சர் மதன் ராஜா




சென்னை, ஜூன் 11

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ. மதன் ராஜா தலைமையில் இன்று சென்னை கிண்டி சிட்கோ அலுவலக கூட்டரங்கத்தில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களுடன் துறை சார்ந்த அரசு திட்டங்கள் குறித்தும், ஒவ்வொரு திட்டத்திற்கான இலக்கினை அடைவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த ஆண்டினை விட அதிக அளவில் பயனாளிகளை கண்டறிந்து தொழில் முனைவோர்களை உருவாக்குவது நமது சாதனையாக இருக்க வேண்டும் எனவும் மேலும், அதிக அளவில் விழிப்புணர்வு கூட்டங்களை அந்தந்த மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதில் குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கும், மகளிர், ஆதீதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிக எண்ணிக்கையில் கடன் வழங்கப்பட வேண்டும் என்றும், தற்போது உள்ள திட்டங்களின் வாயிலாக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு திட்டம் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டம், குறுந்தொழில்கள் முறைபடுத்துதல் திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் வாயிலாக அதிகபடியான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவது நமது அரசினுடைய சாதனையாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து திட்டங்களின் இலக்கினை எய்திடும் வகையில் துரிதமாக செயல்பட வேண்டும் என்றும், ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட அனைத்து நிறுவனங்களும் உற்பத்தி தொடங்கிட வழிவகை செய்திட வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழக முதன்மை செயலாளர் ஆ.கார்த்திக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், இன்ட்கோசர்வ் நிர்வாக இயக்குநர் ராஜ கோபால் சுங்காரா, மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நகர் ஊரமைப்பு ஆணையரகம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்: அமைச்சர் ராஜ்குமார் ஆய்வு




சென்னை, ஜூன் 11

தமிழ்நாடு முதல்அமைச்சர் ச.ஜோசப் விஜய் நல்வழிகாட்டுதலின்படி சென்னை, கோயம்பேடு, சிஎம்டிஏ கட்டடத்தில் உள்ளநகர்ஊரமைப்பு ஆணையரகம் அலுவலகக் கூட்டரங்கில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ப. ராஜ்குமார் தலைமையில் நகர்ஊரமைப்பு ஆணையரகம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முன்னதாக அமைச்சர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட மூன்று நபர்களுக்கு நகர் ஊரமைப்பு துறையில் உதவி இயக்குநர் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகர் ஊரமைப்பு ஆணையரகத்தின் நிர்வாக அமைப்பு, துறை கட்டமைப்பு, வளர்ச்சித் திட்டங்கள், மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கிய கூறுகள், புவிசார் தகவல் அமைப்பு அடிப்படையிலான முழுமைத் திட்டம், திட்டக் குழுமங்களின் அமைப்பு மற்றும் உறுப்பினர் நியமனங்கள், உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான நிதிகள், ஒற்றைச் சாளர இணையதள வசதி, சுய சான்றிதழ் திட்டத்தின் முன்னேற்றம், மலையிடப் பாதுகாப்பு குழுமம், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள்/ மனைகளை வரன்முறைப்படுத்துதல், அனுமதியற்ற கல்வி நிறுவனக் கட்டிடங்கள் வரன்முறைப்படுத்துதல் குறித்தும் விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் இரா.கிர்லோஷ் குமார், நகர் ஊரமைப்பு ஆணையர் கிரண் குராலா, கூடுதல் இயக்குநர் ப.ரங்கநாதன், இணை இயக்குநர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தருமபுரியில்

## 645 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல் காவல்துறையினர் அதிரடி நடவடிக்கை

தருமபுரி ஜூன் 11

தருமபுரி மாவட்டத்தில் சட்டவிரோதமாக குட்கா பொருட்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில், தருமபுரி நகர காவல் நிலையம் மற்றும் அதியமான் கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காவல்துறையினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்திற்கிடமாக சென்ற வாகனங்களை நிறுத்தி சோதனை செய்ததில், சுமார் 645 கிலோ எடை கொண்ட தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்கள் கடத்தி வரப்பட்டு வந்தது கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து குட்கா பொருட்களை பறிமுதல் செய்த காவல்துறையினர், சம்பவம் தொடர்பாக 5 நபர்களை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## காரிமங்கலம் கிழக்கு ஒன்றியத்தில்

# பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் கே.பி.அன்பழகன் வாக்களித்த தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்தார்



தருமபுரி ஜூன் 11

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் 6 வது முறையாக கழகம் சார்பில் வேட்பளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் எம் எல் ஏ பாலக்கோடு தொகுதிக்குட்பட்ட காரிமங்கலம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அடிலம், இண்டமங்கலம், ஏ.முருக்கம்பட்டி, பைசுஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட 50 கிராமங்களில் இரட்டை இலைக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

அப்போது கழக எம்எல்ஏக்கு பொது மக்கள் பட்டாசு வெடித்தும், ஆரத்தி எடுத்தும், மாலை அணிவித்து சிறப்பு செய்து உற்சகமாக வரவேற்றனர். இந்த நிகழ்வில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .



# டீசல் விலையை குறைக்க கோரி மத்திய மாநில அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்

கோவை ஜூன்:11

கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு லாரி புக்கிங் ஏஜெண்ட் சம்மேளனம் சார்பாக டீசல் விலையை குறைக்க கோரி மத்திய மாநில அரசுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்தில் 20க்கும் மேற்பட்ட சங்கங்களை சேர்ந்த உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து சங்க நிர்வாகிகள் கூறுகையில் மத்திய,மாநில அரசுகள் டீசல் விலையை உயர்த்தியதால் லாரிகளை இயக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் வாடகை ஏற்றினால் பொதுமக்கள் தலையில் தான் விடியும் என்றும் விலைவாசி உயர்வு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக மத்திய மாநில அரசுகள் தலையிட்டு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் கேட்டுக் கொண்டனர்.

ஏற்கனவே லாரிகளுக்கு பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது டீசல் விலை உயர்வால் தொழில் செய்ய முடியாத சூழ்நிலை வருவதாக தெரிவித்தனர்.

இது குறித்து முதலமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளதாகவும் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் தெரிவித்தனர். இதில் 500க்கும் மேற்பட்ட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு லாரி புக்கிங் ஏஜெண்ட் சம்மேளனம் தலைவர் கணேஷ்,செயலாளர் காஜா உசேன்,பொருளாளர் முகம்மதுரபிக் மற்றும் சங்க நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கோபி அருகே

# மனுநீதி நாள் முகாமில் ரூ.1.92 கோடி நலத்திட்ட உதவிகள்



ஈரோடு ஜூன் 11

ஈரோடு மாவட்டம் சிறுவலூர் வெள்ளாங்கோவிலில் மனுநீதி நாள் முகாம் நடந்தது. இதில் மாவட்ட ஆட்சியர் கந்தசாமி கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றார். அப்போது அவர் 174 பயனாளிகளுக்கு ரூ.1.92 கோடி மதிப்பில் பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது, இது போன்ற மனு நீதி முகாம்கள் அரசின் திட்டங்களை மக்கள் தெரிந்து கொள்ளவும் இதன் மூலம் கிராம மக்களும் பயன்பெறும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது என்று கூறினார். முன்னதாக பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை அவர் பார்வையிட்டார் .



ஈரோடுமாவட்டஆட்சித்தலைவர்கந்தசாமிஈரோடுமாவட்டம்கோபிசெட்டிபாளையம், பொம்மநாயக்கன்பாளையம், கூகலூர் சாலை முதல் ஆனைமுனியப்பன்கோவில் கிளை முதல் கொள்ளமடை வரை நடைபெற்று வரும் சாலை பணிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# குமரி 4 வழி தேசிய நெடுஞ்சாலை பணிகள்; மாவட்ட கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஜூன்.11

தேசிய நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை நான்குவழிச்சாலை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

கேரளா தமிழ்நாடு எல்லையான களியக்காவிளை முதல் கன்னியாகுமரி வரையிலான என்.எச் 47 நான்கு வழிச்சாலையில்கூடுதல்கட்டுமானபணிகள்ரூ.1041.3 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக பெட்டி வடிவக்குழாய் பாலப்பணி 15, பெட்டி வடிவக்குழாய் பாலங்கள் அகலப்படுத்தும் பணி 15, சிறிய பாலங்கள் 14, பெரிய பாலங்கள் 25, வாகனங்கள் செல்வதற்கான சுரங்கப்பாதை பணிகள் 9, வாகனங்களுக்கான மேம்பாலங்கள் 12, பாதசாரிகளுக்கான மேம்பாலங்கள் 2, ரயில்வே மேம்பாலம் 2, வடிகால் பணிகள், 1 சுங்கசாவடி, பேருந்து நிறுத்தங்கள், நிழற்கூடைகள், சரக்கு வாகனங்கள் நிறுத்துமிடம், சேவைச்சாலைகளை அகப்படுத்துதல் என பல்வேறு பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் 2 பெட்டி வடிவக்குழாய் பாலங்கள் அகலப்படுத்தும் பணியும், 2 சிறிய பாலங்கள் பணியும், 2 சுரங்கப்பாதை பணியும், 7 பெரிய பாலங்கள் பணியும், ஒரு ரயில்வே மேம்பால பணியும் நடைபெற்று வருகிறது.

இந்த பணியால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு நடைபெற்று வரும் பணிகளின் தற்போதைய நிலைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக வழுக்கம்பாறை, ஒழுகினசேரி, புத்தேரிகுளம், சுங்கான்கடை, தோட்டியோடு, வாழ்வச்சக்கோஷ்டம், பள்ளியாடி, காப்புக்காடு உள்ளிட்ட இடங்களில் நடைபெற்று வரும் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலை துறையினர் இப்பணிகளை மேலும் தாமதிக்கமால் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் எந்தவிதமான காரணமும் கூறமால், தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தேசிய நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் மற்றும் ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. என கலெக்டர் கூறினார்.

நடைபெற்ற ஆய்வுகளில் தேசிய நெடுஞ்சாலைத் துறை திட்ட இயக்குநர் சச்சின் குமார், திட்ட பொறியாளர் சிவா, மாவட்ட நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## மார்த்தாண்டம் காவல் நிலையம் முன்பு

# ஆட்டோவை சேதப்படுத்திய வாலிபர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூன்.11

மார்த்தாண்டம் அருகே புளிச்சிவிளை பகுதியை சேர்ந்தவர் ஸ்ரீகண்டன் (47). ஆட்டோ டிரைவர். இவருக்கும் எருமகுடி விளை பகுதியை சேர்ந்த சுஜின் ( 35 )என்பவருக்கும் வழிப்பாதை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ளது. அதற்காக மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பாதை பிரச்சனைக்காக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரண்டு பேரையும் காவல் நிலையத்திற்கு போலீசார் அழைத்துள்ளனர். அப்போது ஆட்டோவில் வந்த ஸ்ரீகண்டன் ஆட்டோவை காவல் நிலையத்திற்கு வழியே நிறுத்திவிட்டு உள்ளே சென்றுள்ளார். இதை பார்த்த சுஜின் வெளியே நிறுத்தி இருந்த ஆட்டோவை அடித்து உடைத்துள்ளார். இதை கண்ட ஸ்ரீகண்டன் சென்று ஏன்? ஆட்டோவை சேதப்படுத்தினாய்? என்று கேட்டுள்ளார். இதில் ஆத்திரமடைந்த சுஜின் ஸ்ரீகண்டனை தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இது குறித்து ஸ்ரீகண்டன் மார்த்தாண்டம் போலீஸ் நிலையத்தில் புகாரளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## தென்தாமரை குளம் அருகே

# பெண்ணை தாக்கி கொலை மிரட்டல்; வாலிபர் மீது வழக்கு

கன்னியாகுமரி, ஜூன் .11

கன்னியாகுமரியை அடுத்த தென்தாமரை குளம் பகுதியை சேர்ந்தவர் தங்கதுரை மனைவி செல்வராணி (41). இந்த தம்பதிகளுக்கு 2 மகன்கள் உள்ளனர். அவர்கள் வெளிநாட்டில் வேலை செய்து வருகின்றனர். கணவர் தங்கதுரை டிரைவராக வேலை பார்த்து வருகிறார். அதே பகுதியை சேர்ந்தவர் கிருஷ்ணன் மகன் சந்தானம் (27). இந்த நிலையில் சம்பவ தினம் இரவு தங்கதுரையின் வீட்டு காம்பவுண்டுக்குள் சந்தானம் நடமாடியதாக கூறப்படுகிறது. இதை பார்த்த செல்வராணி சத்தம் போட்டவுடன் அவர் அங்கிருந்து ஓடி விட்டாராம்.

இது குறித்து அடுத்த நாள் காலை சந்தானத்திடம் செல்வராணி தட்டி கேட்டுள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த அவர் தகாத வார்த்தைகள் பேசி செல்வராணியின் சேலையை பிடித்து இழுத்து, பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டதோடு, கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இது குறித்து செல்வராணி அளித்த புகாரின் பேரில் தென்தாமரை குளம் போலீசார் வழக்கு பதிவு செய்து வாலிபரை தேடி வருகின்றனர்.



தருமபுரி மாவட்ட தமிழக வெற்றிக்கழகத்தின் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விமல்ராஜ் மகன் லிங்க் ராஜ் 6 வது பிறந்த நாளை முன்னிட்டு தருமபுரி மாவட்ட அரசு மருத்துவமனை அருகில் பொதுமக்கள் 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கக்கன் இளைஞர் நற்பணி மன்றம் மற்றும் மேற்கு மாவட்ட தெற்கு ஒன்றியம் செந்தில்நாதன், முருகன், வினோத், சுந்தரவேல்,பாபு, கோகுல்,தேவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவின் வளர்ச்சியில் பிரதமர் மோடியின் சாதனைகள்

## எழுத்தாளர் எஸ் ஆர் சுப்பிரமணியம் அறிக்கை



ஈரோடு ஜூன் 11

ஈரோட்டை சேர்ந்த சமூக ஆர்வலரும் எழுத்தாளருமான எஸ் ஆர் சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

இந்திய மக்களால் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, நாட்டின் பிரதமராக மிக நீண்ட காலம் பணியாற்றிய தலைவராக பிரதமர் தநரேந்திர மோடி புதிய வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளார்.

★ஜூன் 10, 2026 அன்று, இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேருவின் 4,398 நாட்கள் பிரதமர் பதவிக் கால சாதனையை முறியடித்து உள்ள அவர் கடந்த 12 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பல்வேறு மாற்றங்களையும் சாதனைகளையும் அவர் தலைமையிலான அரசு நிகழ்த்தி யுள்ளது.

குறிப்பாக, ஜம்முகாஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை வழங்கிய பிரிவு 370 ரத்து, தேசிய பாதுகாப்பை வலுப்படுத்திய நடவடிக்கைகள், நக்சலிச வன்முறைகளை கட்டுப்படுத்திய முயற்சிகள், எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்திய கொள்கைகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேலும், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா, ஆயுஷ்மான்பாரத், உஜ்வாலாதிட்டம், ஜல் ஜீவன் மிஷன், விவசாயிகள் நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு ள்ளன.

உலகத் தரத்திலான நெடுஞ்சாலைகள், விரைவு ரயில் திட்டங்கள், புதிய விமான நிலையங்கள், துறைமுக மேம்பாடுகள், டிஜிட்டல் இந்தியா, யூபிஐ பரிவர்த்தனை புரட்சி, ஸ்டார்ட்அப் வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இந்தியாவின் பொருளாதாரத்தை புதிய உயரங்களுக்கு கொண்டு சென்றுள்ளன.

சர்வதேச அரங்கிலும் இந்தியாவின் செல்வாக்கு கணிசமாக உயர்ந்துள்ளது. ஜி20 மாநாட்டை வெற்றிகரமாக நடத்துதல், உலக நாடுகளுடன் வலுவான உறவுகளை உருவாக்குதல், இந்தியாவின் குரலை உலக மேடைகளில் உறுதியாக ஒலிக்கச் செய்தல் போன்றவை இந்தியாவின் பெருமையை உயர்த்தியுள்ளன.

"வளர்ந்த இந்தியா – 2047" என்ற இலக்கை நோக்கி இந்தியாவை முன்னேற்றிச் செல்லும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் இந்த வரலாற்றுச் சாதனை, இந்திய ஜனநாயகத்தின் வலிமையையும் மக்கள் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது. ★இந்த மகத்தான சாதனையை எட்டியுள்ள பிரதமர் நரேந்திர மோடியை வி தி லீடர்ஸ்., சார்பாக வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## முசிறி அருகே

# முட்டை லாரி கவிழ்ந்து விபத்து



திருச்சி, ஜூன் 11

நாமக்கல்லிலிருந்துதிருச்சிநோக்கிச் சென்ற லாரி, முசிறி காவிரி பெரியார் பாலம் அருகே எதிர்பாராதவிதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் லாரியில் ஏற்றி வரப்பட்ட சுமார் ரூ. 6 லட்சம் மதிப்புள்ள 1. 5 லட்சம் முட்டைகள் சாலையில் உடைந்து சிதறின. சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் கிரேன் உதவியுடன் கவிழ்ந்து கிடந்த லாரியை மீட்டனர். முட்டைகள் உடைந்து முட்டை கரு சாலையில் ஆறாகஓடியது.லாரிஓட்டுநர்அங்கிருந்து தப்பித்து ஓடியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்




கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தளி உள்வட்டம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில், மக்கள் தொடர்பு திட்ட முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன், ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி துணை ஆட்சியர் பயிற்சி .சாய்சைதன்யா யாதவ் தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

குழித்துறை நகராட்சியில்

# ஆணையாளரை கண்டித்து 2ம் நாளாக உறுப்பினர்கள் உள்ளிருப்பு போராட்டம்



மார்த்தாண்டம், ஜூன்.11

குழித்துறை நகராட்சியின் ஆணையளாராக கடந்த 4 மாதங்களுக்கு முன் வெங்கடாச்சலபதி என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்றபின் நகராட்சிக்கு உட்பட்ட 21 வார்டுகளிலும் சுத்திகரிக்கபட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படாமலும், குடிநீர் குழாய்கள் பல்வேறு பகுதிகளில் உடைப்பு ஏற்பட்டு சரிசெய்யப்படாமலும், குப்பைகளை அகற்றப்படாமலும் கழிவறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமலும் சுகாதார சீர்கேடு ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருவதோடு நகராட்சி கவுன்சிலர்களை மதிக்காமலும் அவர்களது கோரிக்கைகளுக்கு செவி கொடுக்காமலும் இருந்து வருவதோடு கோப்புகளில் கையெழுத்து போடாமல் அலைக்கழிப்பு செய்து வந்துள்ளார்.

இதனை நகர்மன்ற உறுப்பினர்கள் கண்டித்த நிலையில் நேற்று முன் தினம் நகர்மன்ற கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்படிருந்தது. இந்தகூட்டத்தில் கலந்துகொள்ள நகர்மன்ற தலைவர் உட்பட உறுப்பினர்கள் வந்திருந்த நிலையில் அலுவலகத்தில் இருந்த போதிலும் ஆணையாளர் கூட்டத்தை புறக்கணி த்தார். இதனை கண்டித்த பாரதிய ஜனதா கவுன்சிலர்கள் விஜூ, ரெத்தினமணி, மினி குமாரி, காங்கிரஸ் கவுன்சிலர் ஆட்லின் கெனில் ஆகியோர். உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கூட்டம் நடைபெறுவதற்கு முன்பே ஆணையாளர் போலீசாரை வரவழைத்து அலுவலத்தினுள் நிற்க வைத்திருந்தார். இந்த சம்பவம் நகராட்சி அலுவலகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதற்கிடையே ஆணையாளர் நகராட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளாததைகண்டித்து மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் கவுன்சிலர்கள் ஜூலியட்டும் மர்லின் ரூத் ஜலீலா ராணி விஜயலட்சுமி லலிதா ஆகிய நான்கு கவுன்சிலர்கள் நடப்பில் செய்தனர் இதனால் நகராட்சி கூட்டம் தொடக்கம் முதல் முடியும் வரை பரபரப்பாக காணப்பட்டது. இந்த நிலையில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட ஐந்து கவுன்சிலர்களும் விடிய விடிய போராட்டத்தை தொடர்ந்தன இதை அடுத்து நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதனால் குழித்துறை நகராட்சி பரபரப்புடன் காணப்படுகிறது.

கன்னியாகுமரியில்

# ஒருங்கிணைந்த நவீன சி.சி.டி.வி. கண்காணிப்பு அறை; எஸ் பி ஸ்டாலின் திறந்து வைத்தார்



கன்னியாகுமரி , ஜூன்.11

பிரசித்தி பெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமாரியில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில் 132 அதிநவீன சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி கடற்கரை பகுதி, சன்னதி தெரு, படகு துறை, ரத வீதிகள், மெயின் ரோடு உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் இந்த கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், இவற்றை கண்காணிப்பதற்காக கன்னியாகுமரி காவல் நிலையத்தில் நவீன கண்காணிப்பு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காணிப்பு அமைப்பை நேற்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறுகையில்: கன்னியாகுமாரியில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில் கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை சார்பில் 132 அதிநவீன சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள்நிறுவப்பட்டுள்ளது. கூட்டத்தில் இருக்கும் முன்னாள் குற்றவாளிகளை அவர்களின் புகைப்ப டத்துடன் ஒப்பிட்டு துல்லியமாக கண்டு பிடித்து எச்சரிக்கும் திறன் கொண்டது. மேலும் கன்னியாகுமரியில் 10 ஏஐ கேமராக்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் விரைவில் அவை இயக்கத்தில் வரும் என்றும், கன்னியாகுமரிமாவட்டத்தில்ஊர்காவல்திட்டத்தில் ஒரு ஆண்டில் 2800 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் நேற்று ஒரே நாளில் “ஆப்ரேஷன் ஷீல்ட்” என்ற பெயரில் பள்ளி கல்லூரிகளுக்கு அருகே புகையிலை பொருட்கள் விற்பனை செய்த 46 கடைகள் மூடப்பட்டு 1 கிலோ கஞ்சா 1000 பாக்கெட் புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் சின்னமுட்டம் மீன் பிடி துறைமுகத்தில் மீன்பிடி சீசன் நேரத்தில் வெளிமாநில தொழிலாளர்கள் வருகின்றனர். அவர்களுக்கு அடையாள அட்டை அவசியம். அடையாள அட்டை இல்லாத தொழிலாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் சூப்பிரண்டு கலையரசன், பெண்கள் மற்றும் குழந்தைகள் குற்ற தடுப்பு பிரிவு கூடுதல் சூப்பிரண்டு பாலகிருஷ்ணன், கன்னியாகுமரி துணை சூப்பிரண்டு ஜெயச்சந்திரன், மதுவிலக்கு பிரிவு துணை சூப்பிரண்டு ராஜா, கன்னியாகுமரி இன்ஸ்பெக்டர்சுந்தர ராஜபெருமாள், கன்னியாகுமரி நகராட்சி ஆணையாளர் பட்டுச்சாமி, நகரமைப்பு ஆய்வாளர் சேக் அப்துல்காதர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சாமியார்மடம் பகுதியில்

# பாசன கால்வாயை சேதப்படுத்தி பள்ளி சுவர் கட்டுவதாக புகார்



மார்த்தாண்டம், ஜூன்.11

குழித்துறை பட்டணங்கால் பாசனப்பிரிவு உதவிப் பொறியாளர் கட்டுப்பாட்டிலுள்ள பட்டணங்கால்வாயின் பிரதான கால்வாய் சாமியார்மடம் அருகே கஞ்சிமடம் கோவில் எதிர் பகுதி வழியாக செல்கிறது. இந்த கால்வாயின் மேற்பகுதியில் அரசு பள்ளிகூடம் ஒன்று உள்ளது. தற்போது இந்த பள்ளி சுற்று சுவர் கட்டுவதற்காக பட்டணங்கால்வாயின் மேல்கரையை இடித்து கால்வாய்க்குள்ளே போட்டு ஹிட்டாச்சி மூலம் வேலை செய்து வருகிறார்கள்.

இன்னும் சில தினங்களில் பட்டணங்கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் எடுக்க வேண்டிய நிலையில், சானலின் குறுக்கே மண் கொட்டப்பட்டுள்ளதால் தண்ணீர் செல்ல தடை ஏற்பட்டுள்ளது. இந்த கால்வாய் மூலம் கடைவரம்பு வரை விவசாயம் நடைபெற்றுவருகிறது. கால்வாயில் மண் நிரப்பியதால் பிரதான கால்வாய் மட்டும் 70 கிலோ மீட்டர் நீளமுடையதுமான பட்டணம் சானலில் தண்ணீர் விட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசு பள்ளிக்கூடத்தின் பின்பக்க காம்பவுண்டு சுவரை கோடை காலத்தில் கட்டாமல் விவசாயம் நடைபெறும் இவ்வேளையில் வேண்டுமென்றே மேற்கொள்வதாக தெரிகிறது.

மேலும் பள்ளிக்கூடத்திற்கு காம்பவுண்டுசுவர் கட்டும்போது, உரிய ஆழத்தில் தோண்டி பவுண்டேஷன் போடாமல் பட்டணங்கால்வாயின் பக்கச்சுவர்மீதே வைத்து கட்டினால் எதிர்காலத்தில் அதுவும் இடிந்து மீண்டும் சானலுக்குள் விழ வாய்ப்பு உள்ளது. எனவே அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொண்டி செய்யது முகம்மது அரசு மேல்நிலைப் பள்ளியில்

# ஓராண்டாக கழிப்பறை கட்டடம் ஒப்படைக்காததால் மாணவர்கள் அவதி

## மமக செயலாளர் பரக்கத் அலி கலெக்டருக்கு மனு



ராமநாதபுரம், ஜுன் 11

மனிதநேய மக்கள் கட்சி தொண்டிப் பேருர் செயலாளர் பரக்கத்அலி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை தாலுகா தொண்டி செய்யது முகம்மது அரசு மேல்நிலைப் பள்ளியில் அதிகமான மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். மாணவர்கள் சிறுநீர் மற்றும் கழிப்பிடம் செல்வதற்கு கழிவறை வசதி இல்லாத காரணத்தால் மாணவர்களுடைய நலனை கருத்தில் கொண்டு தொண்டி பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 202324 கல்வியாண்டில் சுமார் 13 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டப்பட்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஒரு வருட காலமாக பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை பலமுறை எடுத்துக் கூறியும் செவி சாய்க்காத தொண்டி பேரூராட்சி நிர்வாகம் கட்டப்பட்ட கட்டிடங்களில் பல்வேறு இடங்களில் விரிசல் இருக்கிறது. போர்க்கால அடிப்படையில் பள்ளிக்கு கழிப்பறை கட்டடம் ஒப்படைக்க வேண்டும்

இதன் மீது மாவட்ட ஆட்சித் தலைவர் தனி கவனம் செலுத்தி தொண்டி பேரூராட்சி மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு அவர் என கோரிக்கை மனுவில் கூறி உள்ளார்.

குமரி ரயிலில்

# ரூ 7.48 லட்சத்தை தவறவிட்ட மீனவர் ரயில்வே போலீசார் மீட்டு ஒப்படைத்தனர்




நாகர்கோவில், ஜூன். 11

குளச்சல் அருகே உள்ள வாணியக்குடி பகுதியை சேர்ந்தவர் ஜெயசீலன் (55). இவர் கேரள மாநிலம் கொல்லம் மீன்பிடி துறைமுகத்தில் மீன்பிடி தொழில் செய்து வருகிறார். நேற்று முன்தினம் இரவு புனலூரில் இருந்து மதுரை செல்லும் எக்ஸ்பிரஸ் ரயிலில் இவர் ஊருக்கு வந்து கொண்டிருந்தார். குழித்துறை சந்திப்பில் ரயில் நின்ற போதுதான் கொண்டு வந்த பையை மறந்து வைத்து விட்டு ஜெயசீலன் கீழே இறங்கி சென்றுள்ளார். அந்தப் பையில் ரூ 7.48 லட்சம் பணம் இருந்தது.

சிறிது நேரத்திற்கு பின்னர் ரயிலில் பையை மறந்து வைத்துவிட்டு இறங்கியது அவருக்கு நினைவுக்கு வந்தது. உடனடியாக ரயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். இதன் பேரில் நாகர்கோவில் ரயில்வே போலீசார் உடனடியாக விசாரணையில் இறங்கினர். போலீசார் ரயிலில் சோதனை நடத்துவதற்குள் வள்ளியூர் இருந்து கிளம்பியது. இதை எடுத்து நாங்குநேரியில் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசருக்கு தகவல் தெரிவித்து, அவர்கள் ரயிலில் வந்ததும் ஜெயசீலன் பயணம் செய்த முன்பதிவு இல்லாத பெட்டியில் சோதனை செய்தனர். அப்போது அவரது பேக் கிடைத்தது. பணமும் அப்படியே இருந்தது.

இதை அடுத்து அந்த பேக் திருநெல்வேலி ரயில்வே போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து ஜெயசீலனுக்கு தகவல் தெரிவித்தனர். அவர் உடனடியாக திருநெல்வேலி சென்று பணத்தை பெற்றுக் கொண்டார். தனது பணத்தை மிக விரைவில் மீட்டுக் கொடுத்த ரயில்வே போலீசாருக்கு ஜெயசீலன் நன்றி தெரிவித்தார்.

# “என் இனிய தமிழ் மக்களே...” மவுனமான பாரதிராஜாவின் குரல்; முடிந்தது ஒரு சகாப்தம்



சென்னை, ஜூன் 11

தமிழ் சினிமாவின் கிராமத்து மண்வாசனையை உலக அரங்கிற்கு கொண்டு சென்ற இயக்குநர் பாரதிராஜா இன்று காலமானார். உடல்நலக் குறைவு காரணமாக வீட்டிலேயே சிகிச்சை பெற்று வந்த அவர், தனது 84வது வயதில் உயிரிழந்தார். அவரது மறைவு தமிழ் திரையுலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகக் கருதப்படுகிறது.

இயக்குநர் பாரதிராஜா கடந்த 1941ம் ஆண்டு ஜூலை 17ம் தேதி தேனி மாவட்டம் அல்லிநகரத்தில் பெரியமாயத்தேவர் கருத்தம்மா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். அவருடைய இயற்பெயர் சின்னச்சாமி. பள்ளிப் பருவத்திலேயே இலக்கியம், பேச்சுப்போட்டி மற்றும் மேடை நாடகங்களில் அதிக ஆர்வம் காட்டிய அவர், பின்னர் தனது ஊரில் சுகாதார ஆய்வாளராக பணியாற்றினார். ஆனால் சினிமா மீதான ஈர்ப்பு அவரை சென்னைக்கு அழைத்து வந்தது.

திரைத்துறையில் வாய்ப்பைப் பெறுவதற்காக பல்வேறு சிரமங்களை சந்தித்தார் பாரதிராஜா. வாழ்வாதாரத்திற்காக மேடை நாடகங்கள், பெட்ரோல் பங்கில் வேலை உள்ளிட்ட பல பணிகளை செய்து கொண்டே சினிமாவில் வாய்ப்புக்காக போராடினார்.

அவரது விடாமுயற்சிக்கு பலனாக இயக்குநர் பி. புல்லையாவிடம் உதவி இயக்குநராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அங்கிருந்து தொடங்கிய பயணம் பின்னர் தமிழ் சினிமாவின் வரலாற்றையே மாற்றியது.

1977ம் ஆண்டு வெளியான ‘16 வயதினிலே’ திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமான பாரதிராஜா, தனது முதல் படத்திலேயே தமிழ் சினிமாவில் புதிய பாதையை உருவாக்கினார்.

‘16 வயதினிலே’ திரைப்படம் பாரதிராஜாவுக்கு மட்டுமல்லாமல் கமல்ஹாசன் மற்றும் ரஜினிகாந்தின் திரைப்பயணத்திலும் முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.

தமிழ் சினிமாவை ஸ்டுடியோவிலிருந்து வெளியே கொண்டு வந்த பெருமை பாரதிராஜாவையே சாரும். மண் சார்ந்த வாழ்வியல், கிராமத்து மக்களின் உணர்வுகள், காதல், உறவுகள் மற்றும் சமூக பிரச்சினைகளை தனது படைப்புகளில் இயல்பாக பதிவு செய்தார்.

கதைக்கு ஏற்ப நேரடியாக கிராமங்களுக்குச்சென்று இயற்கைசூழலில் படப்பிடிப்பு நடத்தி ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

‘கிழக்கே போகும் ரயில்’, ‘சிகப்பு ரோஜாக்கள்’, ‘அலைகள் ஓய்வதில்லை’, ‘முதல் மரியாதை’ உள்ளிட்ட பல காலத்தால் அழியாத படைப்புகளை வழங்கியுள்ளார். இயக்குநராக அவர் 40க்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

தமிழ் சினிமாவின் மிக முக்கியமான படைப்பாளிகளில் ஒருவராக விளங்கிய பாரதிராஜா, தனது திரைப்படங்களுக்காக 6 தேசிய விருதுகளை வென்றுள்ளார்.

திரைத்துறைக்கான அவரது பங்களிப்பை பாராட்டி, 2004ஆம் ஆண்டு இந்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருதை வழங்கி கவுரவித்தது.

இயக்குநராக மட்டுமல்லாமல் நடிகராகவும் பாரதிராஜா ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தார். ‘ஆயுத எழுத்து’, ‘திருச்சிற்றம்பலம்’, ‘ஈஸ்வரன்’, ‘ராக்கி’, ‘நம்ம வீட்டுப் பிள்ளை’, ‘பாண்டிய நாடு’, ‘மீண்டும் ஒரு மரியாதை’, ‘அன்னக்கொடி’, ‘ரெட்ட சுழி’ உள்ளிட்ட பல திரைப்படங்களில் குறிப்பிடத்தக்க கதாபாத்திரங்களில் நடித்தார்.

கடந்த 2025ல் வெளியான ‘நிறம் மாறும் உலகில்’ திரைப்படத்திலும் நடித்திருந்தார்.

“என் இனிய தமிழ் மக்களே...”

“என் இனிய தமிழ் மக்களே, நான் உங்கள் பாசத்திற்குரிய பாரதிராஜா பேசுகிறேன்...”

எந்த மேடையாக இருந்தாலும் இந்த வார்த்தைகளுடன்தான் தனது உரையை தொடங்குவார் பாரதிராஜா. அந்த குரல் இன்று மவுனமாகி இருந்தாலும், அவர் உருவாக்கிய கதைகளும் கதாபாத்திரங்களும் தலைமுறைகள் கடந்தும் வாழும்.

பாரதிராஜாவின் மறைவு செய்தி வெளியாகியதைத் தொடர்ந்து திரையுலக பிரபலங்கள், அரசியல்தலைவர்கள் மற்றும் ரசிகர்கள் சமூக வலைதளங்கள் மூலம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

கிராமத்து மக்களின் வாழ்க்கையை வெள்ளித்திரையில் உயிரோட்டமாக பதிவு செய்த அந்த மகத்தான கலைஞருக்கு தமிழ் திரையுலகம் இன்று கண்ணீருடன் இறுதி அஞ்சலி செலுத்தி வருகிறது.

மறைந்தாலும் மறையாத பெயராக தமிழ் சினிமா வரலாற்றில் பாரதிராஜா என்றும் நிலைத்திருப்பார்.

பாரதிராஜா இயக்கிய தமிழ் திரைப்படங்கள்

- 16 வயதினிலே (1977)
- கிழக்கே போகும் ரயில் (1978)
- சிகப்பு ரோஜாக்கள் (1978)
- புதிய வார்ப்புகள் (1979)
- நிறம் மாறாத பூக்கள் (1979)
- கல்லுக்குள் ஈரம் (1980)
- நிழல்கள் (1980)
- அலைகள் ஓய்வதில்லை (1981)
- டிக் டிக் டிக் (1981)
- காதல் ஓவியம் (1982)
- வாலிபமே வா வா (1982)
- மண்வாசனை (1983)
- புதுமைப் பெண் (1984)
- ஒரு கைதியின் டைரி (1985)
- முதல் மரியாதை (1985)
- ஒரு ராதையின் கதை (1986)
- வேதம் புதிது (1987)
- கொடி பறக்குது (1988)
- என் உயிர் தோழன் (1990)
- புது நெல்லு புது நாத்து (1991)
- நாடோடித் தென்றல் (1992)
- கிழக்குச் சீமையிலே (1993)
- கருத்தம்மா (1994)
- பசும்பொன் (1995)
- அந்திமந்தாரை (1996)
- தமிழ்ச் செல்வன் (1996)
- தாஜ்மகால் (1999)
- கடல் பூக்கள் (2001)
- ஈர நிலம் (2004)
- பொம்மலாட்டம் (2008)
- அன்னக்கொடி (2013)
- மீண்டும் ஒரு மரியாதை (2020)

இயக்குநர் பாரதிராஜா தமிழ் திரைப்படங்களைத் தவிர, தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளிலும் சில படங்களை இயக்கியுள்ளார்.

## ஆச்சிபட்டி ஊராட்சி த.வெ.க சார்பில்

# தமிழ்நாடு முதல்வர் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு ரொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி



கோவை ஜூன்: 11

பொள்ளாச்சி சட்டமன்றத்திற்கு உட்பட்ட ஆச்சிபட்டி ஊராட்சி தமிழக வெற்றி கழகம் சார்பில் முதலமைச்சர் விஜய் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை கழக நிர்வாகிகள் வழங்கினர். கமலமுத்து நகர் அரசு பள்ளி மற்றும் ஆ.சங்கம்பாளையம் பள்ளி மாணவர்களுக்கு சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் மழை பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஆச்சிபட்டி ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை கழக நிர்வாகி முருகேசன் முத்துலட்சுமி அவர்களின் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்பாலாஜி தலைமை வகித்தார். பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய செயலாளர்வெங்கடேஷ் முன்னிலை வைத்தார். நகர செயலாளர்கள் அக்குபாய்,தங்கராஜ்,தர்மராஜ் ஆகியோர் விருந்தி னர்களாக கலந்து கொண்டனர். வெங்கடசலம்,சரஸ்வதி, அருண் ஹரிஹரன்,அபினவ் சூர்யா,முகமது ஆசிம், சூர்யா,விமல் ஆதித்யா, கனிஷ்,காளிதாஸ்,சுதர்ஸா,சந்திர கலா,லதா, சாய்மீனா,வெங்கடேஷ்,சூர்யா,பிரியா, வினோத்,ஸ்டிபன்,முருகேசன்,மோகனன் ஆகிய கழக நிர்வாகி களும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம்

# காமாட்சிபுரம் கிராமத்தில் கலெக்டர் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம்



தேனி, ஜூன் 11

தேனி மாவட்டம், காமாட்சிபுரம் கிராமத்தில் (10.06.2026) நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பொதுமக்களின் கோரிக்கைகள் நேரடியாக கேட்கப்பட்டு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த முகாமில் மொத்தம் 522 பயனாளிகளுக்கு ரூ.2,09,63,699/ மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. வைத்திநாதன், பயனாளிகளுக்குநலத்திட்டஉதவிகளை வழங்கினார்.

மேலும், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத்மிஸ்ரா முன்னிலை வகித்து, அரசின் திட்டங்கள் மக்களை சென்றடைவதன் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

முகாமில் முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள், வீட்டு மனைப் பட்டாக்கள், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. பொதுமக்களின் மனுக்களும் பெறப்பட்டு, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். மக்கள் குறைகளை நேரடியாக கேட்டு உடனடி தீர்வு காணும் நோக்கில் தமிழக அரசின் மக்கள் தொடர்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## விளாத்திகுளம்

# வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாய முகாம்



விளாத்திகுளம் ஜூன் 11.

தூத்துக்குடி மாவட்டம்விளாத்திகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் வருவாய் தீர்வாய முகாமில் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியான மனுதாரர்களுக்கு 09.06.2026 வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலைகள், தூத்துக்குடி1 அவர்களால் 12 நபர்களுக்கு பட்டா மாறுதல் ஆணை வழங்கப்பட்டது.

## வாணியம்பாடி அருகே

# மன உளைச்சலால் இளைஞர் தற்கொலை முயற்சி



திருப்பத்தூர், ஜூன் 11

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த கனவாய்புதூர் பகுதியைச் சேர்ந்த திருமலை (27), பெற்றோர் இறந்ததால் தனிமையில் வாழ்ந்து வந்த நிலையில் மன உளைச்சலால் தன்னைத்தானே கழுத்தை அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட அவர் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இதுகுறித்து வாணியம்பாடி கிராமிய காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த

# பொதுமக்கள் வாட்ஸ் அப் மூலம் கோரிக்கைகளை தெரிவிக்கலாம்: கலெக்டர் ரேவதி தகவல்




தஞ்சாவூர் ஜூன் 11

தஞ்சாவூர்மாவட்ட கலெக்டர் ரேவதி எடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பாக 04362279449 என்ற தொலைபேசி எண்ணிலும் அல்லது 9345088997 என்ற செல்போன் எண்ணிற்கு வாட்ஸ் அப் வழியாகவும் தெரிவிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு ள்ளது

## தமிழகத்தில் உள்ள

# அனைத்து டாஸ்மாக்,மது கடைகளையும் அரசு மூட வேண்டும்: மகளிர் ஆயம் வலியுறுத்தல்




தஞ்சாவூர் ஜூன் 11

தமிழகத்தில் உள்ள அனைத்து டாஸ்மார்க் மதுக்கடைகளையும் அரசு மூட வேண்டும் என மகளிர் ஆயம் வலியுறுத்தி உள்ளது

தஞ்சாவூர் தலைமை தபால் நிலையம் அருகே மகளிர் ஆயம் சார்பில் கோரிக்கை கூட்டம் நடைபெற்றது

இதில் அரசு நடத்தும் டாஸ்மாக் மதுக்கடைகளும், தனியார் நடத்தும் மனமகிழ் கூடங்களும் ,தமிழ்நாடு முழுவதும் பரவலாக உள்ளன. போதை பொருள்கள் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங் களில் ஏராளமாக புழக்கத்தில் உள்ளன. பல அலுவலகங்கள், நிறுவனங்கள், தொழிற்க் கூடங் கள் என எங்கும் போதைப் பொருள் மயமாக உள்ளது. இவற்றால் தமிழ்நாட்டு குடும்பங்கள் சீரழிகின்றன,இளைஞர்கள்சிறுவயதிலேயேவீணாகின்றனர். திருட்டுகள் பல்வகை கொள்ளைகள், பெருகி விட்டன, சாலை விபத்துகளும் மிகுந்து விட்டன எனவே அடையாளத்துக்காக சில மதுக்கடைகளை மூடுவது போதாது. அனைத்து வகை சாராயம், மதுக்கடைகளையும் தமிழக அரசு மூட வேண்டும் அனைத்து வகை போதை பொருள் களையும் கடத்துவர் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண் டும் என வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இந்த கூட்டத்துக்கு மகளிர் ஆயம் துணைத் தலைவர் செம்மலர், தலைமை வகித்தார் .தமிழ் தேசிய பேரியக்கதலைமை குழு உறுப்பி னர் ராஜேந்திரன், மாவட்ட செயலர் வைகரை ,மகளிர் ஆயம் நிர்வாகி கள் யமுனா, ராணி, அமுதா, ஆர்த்தி ஆகியோர்கலந்து கொண்டனர்.

# பூந்தமல்லியில் 10 கிலோ கஞ்சா கடத்திய கேரள இளைஞர்கள் 2 பேர் கைது

சென்னை, ஜூன் 11

ஆவடி காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா உத்தரவின்படி, பூந்தமல்லி மது விலக்கு போலீசார் தீவிர ரோந்துமற்றும்கண்காணிப்புபணியில்ஈடுபட்டுவந்தனர்.

அப்போது பூந்தமல்லி புறவழிச்சாலை பேருந்து நிலையம் அருகே போலீசார் கண்காணிப்பில் இருந்தபோது, சந்தேகத்திற்கிடமாக கையில் பைகளுடன் நடந்து சென்ற 2 இளைஞர்களை நிறுத்தி விசாரணை நடத்தினர். அவர்களிடம் இருந்த பைகளை சோதனை செய்தபோது, இருவரும் தலா 5 கிலோ வீதம் மொத்தம் 10 கிலோ கஞ்சாவை வைத்திருந்தது கண்டுபிடிக்கப்ப ட்டது. இதையடுத்து போலீசார் கஞ்சாவை பறிமுதல் செய்தனர். பின்னர் மேற்கொண்ட விசாரணையில், அவர்கள் கேரள மாநிலத்தைச் சேர்ந்த சுஜித் (26) மற்றும் ராய் ஜாய் (20) என்பது தெரியவந்தது. மேலும், ஒடிசா மாநிலத்தில் இருந்து குறைந்த விலைக்கு கஞ்சாவை வாங்கி வந்து, பூந்தமல்லி பகுதியில் அதிக விலைக்கு வடமாநில தொழிலாளர்களுக்கு விற்பனை செய்து வந்ததும் தெரியவந்தது. இதுகுறித்து பூந்தமல்லி மது விலக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து, இருவரையும் கைது செய்தனர். பின்னர் பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர்கள் சிறையில் அடைக்கப்ப ட்டனர். பூந்தமல்லி பகுதியில் 10கிலோகஞ்சாபறிமுதல்செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## போச்சம்பள்ளி அருகே

# கோடிபுதூர் கிராமத்தில் 116 வது ஆண்டு ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் திருவிழா

### தர்மகத்தா விக்ரம் ராஜா தலைமையில் நடைபெற்றது

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே கோடிபுதூர் தென்பெண்ணை ஆற்றங்கரையில், பிரசித்தி பெற்ற ஸ்ரீபத்ரகாளியம்மன் கோயில் 116 ஆம் ஆண்டு திருவிழா ஒருவாரமாக விக்ரம் ராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் பெண்கள் பொங்கல் வைத்து வழிபட்டனர். நேற்று 4ம் நாள் ஸ்ரீபத்ரகாளியம்மனுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. தொடர்ந்து, கோயில் முன் சுமார் 10 அடி உயரத்தில் 5 பரணைகள் அமைக்கப்பட்டது. இதில் 4 பரண்களில் ஆடுகளையும், 1 பரணில் பன்றியையும் கட்டி வைத்திருந்தனர். அப்போது, அருள் வந்து ஆடிய பூசாரி, பரண் மீது ஏறி பன்றி மற்றும் ஆடு வயிற்றை கிழித்து, அதில் வாழைப்பழத்தை போட்டு பிசைந்து ரத்தச்சோறு சாப்பிட்டார். பின்னர், பரண் மீது இருந்தவாறு ரத்தம் கலந்த சாதத்தை பக்தர்கள் கூட்டத்தை நோக்கி அள்ளிவீசினார். அதனைஅங்குகூடியிருந்த ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண் களும் மடியேந்தி பிடித்து வாங்கி சாப்பிட்டனர். குழந்தை இல்லாத தம்பதிகள், இவ்வாறு இரத்தச்சோறு சாப்பிட்டால் குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பேறு கிடைக்கும் என்பது ஐதீகம் என்பதால், இதனை வாங்குவதற்காக ஏராளமான பக்தர்கள் முண்டியடித்தனர். அதை தொடர்ந்து 2 ஆயிரத் திற்கும் மேற்பட்ட ஆடுகளும், 50க்கும் மேற்பட்ட பன்றிகளும் பலியிட்டு வேண்டுதலை நிறைவேற்றினர். இந்த விழாவில், சேலம் மேட்டூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், போச்சம்பள்ளி, மத்தூர், காவேரிப்பட்டணம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா, பாண்டிசேரியிலிருந்தும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டபக்தர்கள் குடும்பத் துடன் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். மேலும், பலியிட்ட ஆடு, பன்றிகளை நண்பர்களுக்கும், உறவி னர்களுக்கும் விருந்து வழங்கப்பட்டது இதற்கான ஏற்பாட்டை கோவில் தர்மகத்தாக்கள் முருகன் டாக்டர் மணிமாறன் பாபு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு ஏற்பாடு செய்திருந்தனர்.

# மாத்தூர் தொட்டிப்பாலம் உள்ளிட்ட பகுதிகளை மாவட்ட கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஜூன்.11

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் திருவட்டார் ஊராட்சி ஒன்றியம் அருவிக்கரை ஊராட்சிக்குட்பட்ட மாத்தார் பகுதியில் 15 நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் துணை சுகாதார நிலை பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து மாத்தூர் தொட்டிப்பாலம் உள்ளிட்ட பகுதிகளை ஆய்வு மேற்கொண்டு செய்தியாளர்களிடையே தெரிவிக்கையில்:

குமரியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

மாத்தூர் தொட்டிப்பாலம், ஆசியாவிலேயே மிக நீளமான ஒரு பாலம். இங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களில் இருந்தும், பல்வேறு ஊர்களில் இருந்தும் வந்து கண்டுகளித்து செல்கிறார்கள். சுற்றுலாத்துறை சார்பாக மாத்தூர் தொட்டிப்பாலத்தில் ரூ.3.4 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. நடைபெற்று வரும் பணிகள் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

முக்கியமாக மாத்தூர் தொட்டிபாலத்தின் கீழ்பகுதியில் உள்ள சிறுவர் பூங்காவில் கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லை என்று சுற்றுலா பயணிகள் தெரிவித்தார்கள். இப்பூங்காவினை நவீனப்படுத்த வேண்டும் என பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. குறிப்பாக மாத்தூர் தொட்டிப்பாலம் உள்ளிட்ட பகுதிகளை சுற்றுலா பயணிகள் விரும்பும் வகையில் நவீனப்படுத்தப்படும். மாத்தூர் தொட்டிப்பாலம் மட்டுமல்லாது மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சுற்றுலா தளங்களையும் நவீனப்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் மாத்தூர் தொட்டிப்பாலம் செல்லும் வழியில் பாதுகாப்பின்றியும், அனுமதியின்றியும் உணவுப்பொருட்கள் விற்போரின் கடைகளை அகற்றி, அவர்களுக்கு பாதுகாப்பான இடத்தில் கடைகள் அமைப்பதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அருவிக்கரை ஊராட்சி செயலாளர் உள்ளிட்டவர்களுக்கு அறிவுறுத்தியதோடு, குலசேகரம் அரசு மருத்துவமனை சமையல் அறை, மகப்பேறு அறை உள்ளிட்டவைகளை திடீர் ஆய்வு மேற்கொண்டு, சமையலறையின் சுகாதார தன்மை குறித்தும், நோயாளிகளுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டதோடு, மருத்துவமனை வளாகத்தில் பழுதடைந்த நிலையில் அனைத்து கட்டிடங்களையும் உடனடியாக அகற்றிடுமாறு மருத்துவமனை கண்காணிப்பாளர் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ், உதவி செயற்பொறியாளர், பொறியாளர்கள், மருத்துவர்கள் உட்பட பலர்கலந்து கொண்டார்கள்.



கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், மதக்கொண்டப்பள்ளி ஊராட்சி, பின்னமங்கலம் கிராமத்தில், பயனாளி திரு.லட்சுமிநாராயணா த/பெ.சம்பங்கிராமையா தனது விவசாய நிலத்தில் ப்ளூபெர்ரி, ஆப்பிள், அத்தி, அவகேடோ ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், ஒசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி , துணை ஆட்சியர் பயிற்சி .சாய்சைதன்யா யாதவ் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் .குணவதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.